


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.06.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் வழங்கும் விழாவில், சுயஉதவிக் குழுக்களால் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட "செக்கு கடலை எண்ணெய்யை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வின்போது, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் திருமதி. கே.விஜயலட்சுமி, திருமதி. எஸ்.சரண்யா, மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 33,312 சுயஉதவிக் குழுக்களுக்கு 3,134.21 கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்பு வழங்குவதை துவக்கி வைக்கும் வகையில், சென்னையில் செயல்படும் 1401 சுயஉதவிக் குழுக்களின் 14,083 உறுப்பினர்களுக்கு 123.65 கோடி ரூபாய்க்கான வங்கிக்கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறைஅமைச்சர் பி.கே. சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் திருமதி. கே.விஜயலக்ஷ்மி, திருமதி. எஸ்.சரண்யா, மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இந்தியாவிலேயே 9.69 % வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம் பெற

# மகளிர் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதே காரணம்!

### சென்னையில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழு தின விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

***சென்னை,ஜூன்.13-***

***சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மகளிர் சுய உதவிக்குழு தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, குழு சகோதரிகள் தயாரித்த பொருட்களைக் கொண்ட அரங்குகளைப் பார்வையிட்டு வாழ்த்திப் பேசினார்.***

***அப்போது அவர் சுயஉதவிக்குழு சகோதரிகளின் தயாரிப்புப் பொருட்களை அனைவரும் பயன்படுத்துவோம் - அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உற்ற துணையாக இருப்போம் என்று குறிப்பிட்டார்.***

***இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:***

சுயஉதவிக் குழு சகோதரிகள் உங்களை எல்லாம் சந்தித்து 'வங்கிக் கடன் இணைப்பு', 'மணிமேகலை விருது' வழங்குவதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

வருடம் முழுவதும் எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டாலும், நம் மகளிர் சுயஉதவிக் குழு நிகழ்ச்சிக்கு வரும்போது எனது சொந்த அக்கா, தங்கைகளைப் பார்க்கின்ற உணர்வு ஏற்படும். அந்த பாச உணர்வுடன்தான் இந்த நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்க வந்துள்ளேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 1989-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்தார்கள். அதன்பிறகு, நம் முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, இந்தியாவே திரும்பி பார்க்கின்ற அளவிற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உழைப்பிற்கு அங்கீகாரத்தைக் கொடுத்து, அவர்களை எல்லாம் ஒவ்வொரு படியாக உயர்த்திக் காட்டினார்கள்.

#### மணிமேகலை விருது

கலைஞர் அவர்கள் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினார். ஏதோ ஒரு திட்டத்தைத் தொடங்கி விட்டோம். மகளிருக்குக் கடன் உதவிகளைக் கொடுக்கிறோம், தொழில் செய்கிறார்கள், அவர்களே முன்னுக்கு வந்து விடுவார்கள் என்று அவர் அத்துடன் நிற்கவில்லை. அந்த ஒவ்வொரு குழுவும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதில் கலைஞர் அவர்கள் மிக உறுதியுடன் இருந்து செயல்பட்டார்.

அதனால்தான் தமிழ்நாடெங்கும் சிறப்பாகச் செயல்படுகின்ற குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு 'மணிமேகலை விருது'களை கலைஞர் அவர்கள்தான் கொடுக்க நினைத்தார்.

கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் இந்த விருதுகள் எல்லாம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஆனால், நம் கழக அரசின் ஆட்சி அமைந்து, நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த விருதுகளை மீண்டும் கொடுக்க வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டார். 'பெண் விடுதலையே, மகளிர் முன்னேற்றத்திற்கான அடித்தளம்' என்று முழங்கியதுதான் திராவிட இயக்கம்.

#### சிந்தனைகளுக்குச் செயல்வடிவம்

பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற ஆட்சியாக முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் காலம் இருந்தது. இப்போது நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசும் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு நாளும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று இந்தியாவிலேயே முதன்முறையாகச் சட்டத்தை இயற்றியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, காவல்துறையிலும் மகளிர் பணியாற்றலாம் என்ற நிலைமையை, இந்தியாவிலேயே முதன்முறை உருவாக்கியவர், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

#### குழுக்களைச் சந்திப்பேன்

'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தைக் கொண்டு வந்து பல லட்சம் குடும்பங்களை வறுமையில் இருந்து மீட்டவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் 4 லட்சத்து 76 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதில், 53 லட்சத்து 74 ஆயிரம் பேர் உறுப்பினராக இருக்கிறீர்கள். தமிழ்நாட்டு மகளிரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு மாபெரும் இயக்கமாக இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

'எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும், அங்கு சிறப்பாகச் செயல்படக்கூடிய மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை வரவழைத்து அவர்களிடம் பேசி, அவர்களின் குறைகளை எல்லாம் நீ கேட்க வேண்டும்' என்று முதலமைச்சர் அவர்கள் என்னிடம் உத்தரவிட்டார்கள். அதனால், எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அந்தக் குழுக்களைச் சந்திப்பது எனக்கு வழக்கம்.

சில மாதங்களுக்கு முன்பு, திருவாரூர் மாவட்டத்திற்குச் சென்றேன். அங்கும், சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை வரவழைத்துப் பேசினேன். அதேபோல், 15 நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்று, அங்கு இருக்கின்ற குழு சகோதரிகளை எல்லாம் வரவழைத்து அவர்களிடம் பேசினேன். குழுக்கள் மூலம் அவர்களுக்குக் கிடைக்கின்ற கடன் உதவி, பயிற்சி, பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு, ஆகியவை அவர்களின் வாழ்க்கையை எப்படி முன்னேற்றுகிறது என்பதை எல்லாம், அவர்கள் என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

#### குழு மகளிருக்கான அடையாள அட்டை

இந்த சந்திப்புகளின்போதெல்லாம் அந்தக் குழு சகோதரிகள் வைக்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்வது வழக்கம். அவர்கள் என்னென்ன கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்களோ, அவற்றை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்து கொடுங்கள் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். கோரிக்கை வைத்த 6 மணி நேரத்தில் பட்டா, 4 மணி நேரத்தில் வீடு என்று மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகள் உங்களின் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக செய்து கொடுப்பவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.




குழு மகளிருக்கான அடையாள அட்டை கொடுக்கப்பட இருக்கிறது. மகளிர் தினத்தன்று முதலமைச்சர் அவர்கள் அதை அறிமுகப் படுத்தினார். அந்த அடையாள அட்டை இருந்தது என்றால், நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களை, கிராமம் மற்றும் நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச்செல்ல முடியும் என்ற நிலையை உருவாக்கி கொடுத்தவர்தான் முதலமைச்சர் அவர்கள். இந்தக் கோரிக்கையும் மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிகள் வைத்த கோரிக்கைதான். அதை முதலமைச்சரிடம் சொன்னவுடன், இதை உடனே செய்து கொடுங்கள் என்றுச் சொன்னார். விரைவில் அந்த அடையாள அட்டை உங்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட இருக்கிறது.



> **மகளிர் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால்தான், இந்தியா விலேயே 9.69 சதவிகித வளர்ச்சியுடன் இன்றைக்கு தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது என்றால், அதற்கு உங்களின் உழைப்பும், பங்களிப்பும் இல்லாமல் இந்த வளர்ச்சி நிச்சயம் தமிழ்நாட்டிற்கு சாத்தியம் கிடையாது.**

இவற்றையெல்லாம் ஏன் நான் சொல்கிறேன் என்றால், 'மகளிர் குழுக்கள் என்ன உதவியைக் கேட்டாலும், உடனே செய்து கொடுங்கள்' என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அதைத்தான் நாங்கள் செய்துகொண்டு இருக்கிறோம்.

இதையே ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் நினைத்துப் பாருங்கள். குறிப்பாக, 2011-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை நடந்த முந்தைய ஆட்சி காலத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு எந்த முக்கியத்துவமும் தரப்படவில்லை. இப்போது நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் எங்களுக்கு இலக்கு கொடுத்து, அந்த குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அந்த இலக்கு ஒவ்வொரு வருடமும் அதிகமாகிக்கொண்டே செல்கிறது. இந்த ஆண்டு மட்டும் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கு. 37 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக்கடன் இணைப்பு வழங்க வேண்டும் என்ற இலக்கை, எங்களுக்கு கொடுத்து இருக்கிறார்.

#### வங்கிக் கடன் இணைப்புகள்

அதன்படி, தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு மட்டும் 3 லட்சத்து 76 ஆயிரம் பயனாளிகளுக்கு 3 ஆயிரத்து 130 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகள் கொடுக்கப்பட இருக்கிறது. இந்த 4 ஆண்டுகளில் மட்டும் ஒரு லட்சத்து 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்புகளை நம் கழக அரசு வழங்கி இருக்கிறது.

மகளிர் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால்தான், இந்தியாவிலேயே 9.69 சதவிகித வளர்ச்சியுடன் இன்றைக்கு தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது என்றால், அதற்கு உங்களின் உழைப்பும், பங்களிப்பும் இல்லாமல் இந்த வளர்ச்சி நிச்சயம் தமிழ்நாட்டிற்கு சாத்தியம் கிடையாது. அதனால்தான் நேற்று முதலமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் பேசும் போதுகூட குறிப்பிட்டு பேசினார். 'தமிழ்நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக, மகளிராகிய நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள்' என்று பெருமையாகப் பேசினார்.

இங்கு விருது பெறுகின்ற குழுக்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற விருது பெறாத குழுக்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற என்பதையும் நாங்கள் அறிவோம். மகளிர் முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். அதில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

#### முதல் கையெழுத்து

கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில்தான். பெண்கள் பள்ளிகூடத்திற்கு வந்தால் மட்டும் பத்தாது, அவர்கள் உயர்கல்வி படிக்க கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்க, எந்த தனியார் கல்லூரியில் சேர்ந்து படித்தாலும் அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் வழங்கப்படும் என்று புதுமைப்பெண் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அடுத்ததாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை படிக்கின்ற 22 லட்சம் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இப்படி ஒவ்வொரு திட்டத்தையும், மகளிர் முன்னேற்றத்தை மனதில் வைத்துக்கொண்டு நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் இதுவரை எந்த அரசைக் காட்டிலும், திராவிட மாடல் அரசு முழுக்க முழுக்க உங்களுக்கானஅரசாக இயங்கி வருகிறது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

#### விளையாட்டுப் போட்டிகள்

இங்கு சுயஉதவிக்குழு சகோதரிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் எல்லாம் நடத்தி இருக்கிறார்கள். நம் சகோதரி அவர்களும் அதில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார்கள். அவர்கள் என்னிடம் சில கோரிக்கைகள் எல்லாம் வைத்தார்கள்.

மகளிருக்கான விளையாட்டுப் போட்டி என்றால், மென்மையான விளையாட்டுப் போட்டியாக இருக்கக்கூடாது என்று நாங்கள் எல்லாம் திட்டமிட்டே செயல்படுத்தினோம். பொதுவாக, பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்தீர்கள் என்றால், 'மியூசிகல் சேர்', 'கோலப் போட்டி', 'லெமன் இன் த ஸ்பூன்' இந்த மாதிரியான போட்டிகள்தான் நடத்துவார்கள். நானும், அதிகாரிகள் எல்லாம் பேசி ஆண்களுக்குச் சமமாக பெண்களுக்கும் அந்த விளையாட்டுப் போட்டிகளை எல்லாம் நடத்த வேண்டும் என்று, ஆண்கள் மாதிரியே கால்பந்து விளையாட்டு, கொ-கொ விளையாட்டு, கபடி, கயிறு இழுத்தல் போட்டிகளை நடத்தினோம்.

ஆண்களைவிட பெண்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்கான வாய்ப்பாக இந்த விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்திக் காட்டி இருக்கிறோம். இந்தப் போட்டிகளை நடத்திய அனைத்து அதிகாரிகளுக்கும், அதில் பங்கேற்ற, வெற்றி பெற்ற அத்தனைப் பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த வருடம், நீங்கள் இன்னும் அதிகமானவர்களிடம் சொல்லி அதிகமான குழுக்களைச் சேர்ந்த மகளிர் விளையாட வர வேண்டும். உங்களின் திறமைகளை எல்லாம் வெளிக்காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மகளிர் நலன் காக்கின்ற நம் திராவிட மாடல் அரசின் நல்லாட்சி இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்திட, இங்கு வந்து இருக்கின்ற ஒவ்வொரு சகோதரிகளின் ஆதரவும், அன்பும் நிச்சயம் எங்களுக்கு வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசிற்கு நீங்கள் அத்தனைப்பேரும் பக்கபலமாக இருக்க வேண்டும். இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக இங்கு வந்திருக்கின்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த நீங்கள்தான். அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் நீங்கள் எடுத்துச்செல்ல வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இந்த அரசு உறுதுணையக இருக்கும். மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்து சகோதரிகள் நீங்கள் தொழில் முனைவோர்களாக வாழ்வில் வெற்றிபெற்றவராக வருவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இன்றைக்கு இந்த அரசு உங்களை கைத்தூக்கிவிட்டு இருக்கிறது. நீங்கள் இதில் சாதித்து, நீங்கள் உங்கள் மூலம் 10 பேரை கைத்தூக்கிவிட வேண்டும் என்பதையும் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வங்கிக்கடன் இணைப்பு மற்றும் மணிமேகலை விருதுகளைப் பெற்ற அத்தனை சகோதரிகளுக்கும் மீண்டும் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ்., மணிமேகலை விருது பெறவுள்ள தருமபுரி சக்தி மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த விஜயலட்சுமி, கரூர் மாவட்டம், கீதம் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த சரண்யா மற்றும் ஏராளமான சுய உதவிகுழுவைச் சேர்ந்த மகளிர் பலரும் கலந்து கொண்டனர்.